# கிராமப்பஞ்சாயத்து

ஜனவரி—1932

தழ்-2 எண்-4.

ஜட
Y31ம211,N30
N32.2.4.
160212

இதழ் II. நெ. 4.

ரிஜிஸ்தர் நெ. M. 2623.

௨௬

# 'கிராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

12 MAR 1932


ஜனவரி 1932

பிரசுரஞ் செய்வோர்.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

# நன்ஜன்கூடு சத்வைத்திய சாலை கூட்டுவேலை.




ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ்.

"சத்வைத்தியசாலை." நன்ஜன்கூடு

சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

டானிக்
சியவனப்
ராசா
ஜீவஸ்ருதா
பாலஸ்ருதா

I·D·L
CHYAVANPRASH
TONIC

தைலம்:
பிருங்காமலக
அமிர்தாமலக
சந்தனாதி

(குழந்தை கட்டிக்கு, 15 நாள் மருந்து ரூ. 2—0—0).

---

## நஞ்சன்கூடு பல்பொடி

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

---

## கேரள சந்தனச் சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கும் சோப்பு இதுவே.

மிகவும் சிறந்த நறுமணம் பொருந்தியது

கோடையில் மிகுந்த குளிர்ச்சியையும், பரிமளத்தையும் கொடுக்கும்
வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரளச் சோப்பு இன்ஸ்டியூட்,
கள்ளிக்கோட்டை.

---

## உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை சாஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1]

இனாம்! "போஜன விதி" இனாம்!!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26, பிராட்வே, சென்னை.

---

**TO LET**

26.

## அடக்கம்.

பக்கம்


1. 1930-31 விவசாய இலாகா செய்துள்ள வேலை ... ... 57
2. பத்திராதிபரின் குறிப்புகள் ... ... ... 64
3. கிராமாந்திர அபிவிருத்தி நிதி ... ... ... 66
4. தோல் வியாபாரிகளின் தொல்லை ... ... ... 69
5. வரகூர் (வட ஆற்காடு) பஞ்சாயத்து உபாத்தியாயர்கள் மகாநாடு... 70
6. விவசாய துணுக்குகள் ... ... ... 71



சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.
மற்றவர்களுக்கு ... ,, 3.
தனிப்பிரதி ... அணா 4.


12 MAR 1932


விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை


### பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு எதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

# கிராமப் பஞ்சாயத்து.


மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் II] 1932ஆ ஜனவரி [இலக்கம் 4.


## 1930-31-ல் விவசாய இலாகா செய்துள்ள வேலை.

இம்மாகாணத்தில் விவசாய இலாகா செய்துவரும் வேலைப் பலவகையனவாகும். கல்வி, ஆராய்ச்சி, வேலைப் பரீக்ஷை செய்து காட்டுவது, பிரசாரம், பிரசுரங்கள், புள்ளி விவரங்கள் தயாரித்தல் முதலிய பல தினுசு வேலைகள் நடைபெற்று வந்திருப்பதாக நமக்குக் கிடைத்துள்ள 1930-31-ம் வருஷத்திய யாதாஸ்தில் பிரபலமாகக் காணப்படுகிறது.

விவசாயக் கல்வி விஷயமாகச் செய்யப்பட்டுள்ளப் பிரயத்தனங்கள் வெகு சொல்பமே. இதில் மதராஸ் கவர்ன்மெண்டனுஷ்டித்து வரும் கொள்கை சிறிதும் பயன் தரவில்லை. கோயமுத்தூரில் ஏற்பட்டுள்ள விவசாய கலாசாலை அவசியமென்பதில் சந்தேகமில்லை. அங்கு சேர விரும்பும் மாணுக்கர்கள் தொகையும் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது முந்திய வருஷத்தில் 303 பேர் இதில் சேர மனுச்செய்துகொண்டார்கள்; பிரஸ்தாப வருஷத்தில் 365 மனுக்கள் கிடைத்திருக்கின்றன. இக்கலாசாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணுக்கர்களைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டியார், இக்கலாசாலையில் 48 பேர் தான் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றுள்ள நிபந்தனை மாறி அதிக மாணுக்கர்கள் சேர்த்துக்கொள்ள வழி ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயப்படுவதாகக் கூறப்படுகிறது. இக்கலாசாலை வரவரப் பிரபலமாகி வருவதாக அவர்கள் எண்ணுகிறார்கள். இவ்விதம் பிரபலமாக விளங்குவதற்குக் காரணம் யாதென்பதை விசாரித்து அறியவில்லையென்று விவசாய இலாகா டைரக்டர் கூறுகிறார். இம்மாகாணத்திலும் இதா விடங்களிலும் உள்ள விவசாய இலாகாவில் உத்தியோகம் பெற விரும்புவோருக்கே இக்கலாசாலைப் பெரிதும் உபயோகப்பட்டு வருகிறது. தற்கால ரீதியில், மத்திய வகுப்பு ஜனங்களுக்கு உத்தியோகம் தவிர வேறெதுவும் பிழைப்புக்கேற்றதாயில்லை. ஆகையினால் தான் படிப்பு

முடிந்ததும் ஒரு உத்தியோகமென்று கிடைக்கும் சௌகரியங்களுள்ள பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்க விரும்புபவர் தொகை அதிகரித்து வருகிறது. சட்டப் பரீக்ஷை, பி.ஏ. ப்பட்ட பரீக்ஷைகளில் தேருபவரை விட விவசாயப் பயிற்சி கற்பவர் உத்தியோகம் பெறுவது சுலபமாயிருக்கிறது. இதை யறிந்துதான், மேற்கூறப்பட்ட கமிட்டியின் யோசனையை கவர்ன்மெண்டு கவனிக்கவேண்டுமென்று நாம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இவ்விஷயத்தைக் கவர்ன்மெண்டு தம் மதிப்புரையில் கவனிக்காமலே விட்டிருப்பதைக் காண வருத்தமேற்படுகிறது. இக்கலாசாலைக்கு அதிக மாணக்கர்கள் சேர முன் வருவதாகக் கூறுவதிலிருந்து நம் நாட்டிலேற்பட்டுள்ள வேலையில்லாக் கஷ்டம் வெளிப்படையாகிறது. இதர கலாசாலைகளிலும் வேலையின்மையால்தான் அதிகப்பேர்கள் படிக்க வந்து குவிகிறார்கள். நம் நாட்டின் பொருளபிவிருத்திக்குழைத்து மிகவும் உபயோகமாயிருப்பவர்கள் ரயத்துகளேயாவர். அவர்களுக் குபயோகமாக அளிக்கப்படும் கல்வி என்னவென்பதைக் கவனிக்கப்புகின் விசனகரமான கதை வெளிப்படுகிறது. அனகபள்ளியிலிருந்த விவசாய மத்திய கல்விப் பள்ளிக்கூடம் பொதுஜன உபயோகத்திற்கேற்ற வழியிலில்லாததனால் ஆதரவற்று மூடப்பட வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டு விட்டதென்பதை வாசகர்க ளறிந்திருக்கக்கூடும்.

தாலிபரம்பாவிலிருந்த விவசாயக் கல்விப் பள்ளிக்கூடம் திருப்திகரமாக வேலை செய்யாததனால் மூடப்படவேண்டிய அவசியமே ஏற்பட்டு விட்டது. இதைக் கொண்டு விவசாயிகள் இத்தகையப் பள்ளிகளை அபேக்ஷிக்கவில்லை யென்ற முடிவிற்கு கவர்ன்மெண்டு வந்துவிட்டார்கள். காளஹஸ்தியில் ஒரு மத்யதர விவசாயப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டுமென்று உத்தேசமிருந்து அப்பால் அந்த யோஜனையும் கைவிடப்பட்டு விட்டது. உசிலம்பட்டிப் பள்ளிக்கூடத்திற்கு வந்து கொண்டிருந்த மாணக்கர் தொகை குறைந்து போவதனால் அங்கும் உற்சாகத்திற்கு வழியைக் காணோம். இப் பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் 5 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களில் மூவர் வருஷ முடிவாகு முன் பள்ளிக்கூடத்தை விட்டு விலகி விட்டனர். பாக்கி நின்றவர் இருவரேயாவர். 2-வது வகுப்பில் 13 மாணக்கர்கள்தானிருந்தனர். இவ்விதம் நேருவதைத் தடுத்து உபயோகமாகப் பள்ளிக்கூடம் நடைபெற வேண்டுமாயின், வருஷத்தில் சில வாரங்கள் இப் பள்ளிக்கூடங்களில் பண்ணை நிர்வாகத்திற்குத் தேவையான பூச்சி புழு உபத்ரவங்கள், நோய்கள் முதலியவற்றை யறிந்துத் தக்கச் சிகிச்சை செய்யவும், பால் வகையரும் பக்குவம் செய்யவும், கோழி குஞ்சு வளர்க்கவும் போதிய ஞானமேற்படுமாறும் பயிற்சி [illegible] ஏற்பாடு செய்யவேண்டுமென்று விவசாய இலாகா டைரக்[illegible]ர். இவ்விஷயமாகத் தனியான ரிபோர்ட்டு

160212





ஒன்று அனுப்புமாறு கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கின்றனர். இந்த யோசனையும், அனகப்பள்ளி, கோயமுத்தூர், பாலூர் முதலிய இடங்களில் இராப் பகல் பள்ளிக்கூடங்களில் 106 மாணக்கர்களுக்கு பண்ணைத் தொழில் கற்பிக்கச் செய்யப்பட்டுள்ள பரீக்ஷார்த்த ஏற்பாடும் தவிர விவசாயக் கல்வி பரவ வேறெவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை. இப்பள்ளிக்கூடங்கள் அவற்றிற்கருகிலுள்ள கிராமங்களில் வசிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகள் "வேறு வேலை யகப்படாததனால்" இங்கு வந்து பயிற்சிபெறுவதற்கு உபயோகமாயிருக்கின்றன. இவ்விதம் அகஸ்மாத்தாக இங்கு வந்து பயில்பவர்கள் விவசாய விஷயமான நூதன அபிவிருத்தி முறைகளைக் கற்க நேருகிறது.

ஆரம்பக் கல்வித் திட்டத்தில் விவசாயப் போதனையைக் கட்டாயமாக்கிப் பாமரர்கள் ஒருமிக்கப் பலனடைய வழி தேடவேண்டுமென்று சட்ட சபைகளில் ஒரு காலத்தில் கேள்வி பதில் சமயத்தில் விசேஷமாக வற்புறுத்தப்பட்டு வந்தது. பஞ்சாப், வங்காள மாகாணங்களில் உபாத்தியாயர்களுக்கு 2 வருஷம் விவசாயக் கல்வி போதித்தும், உயர் கல்விப் பள்ளிக்கூடங்களிலும், ஆங்கிலம் போதிக்கப்படும் மத்திய கல்வி பள்ளிக்கூடங்களிலும் விவசாய வகுப்புகளை ஏற்படுத்தியும், விவசாயம் சீர்பட நல்ல திட்டங்கள் அநுஷ்டிக்கப்பட்டு முன்னேற்ற மேற்பட்டு வருகிறது; ஆனால் இந்த மாகாணத்தில் காரியார்த்தமாக ஒன்றும் செய்யப்படவே யில்லை. நம் நாட்டு விவசாயப் பொருள்கள், முற்போக்கடைந்துள்ள (அமெரிக்கா) யு. எஸ். ஏ., கனடா, ஆஸ்திரேலியா, ருஷ்யா முதலிய தேசங்களில் விளைந்து வரும் சாமான்களுக்குப் போட்டியாக விற்பனையாக வேண்டுமானல், நம் தேசத்திலுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் விவசாயக் கல்வி போதிப்பதற்கானத் திடமான கொள்கையைத் தயங்காது அனுஷ்டிக்கவேண்டியது அவசியமாகிறது. விவசாய இலாகா டைரக்டர் கூறும் யோசனைப் பிரகாரம் சிறிது காலத்தில் பண்ணை வேலைக் கற்பிக்கச் செய்யப்படும் ஏற்பாடுகள் ஒன்றுமேயில்லாத விடங்களில் விசேஷ உபயோகமாக விருக்குமெனினும் நம் நாட்டிலுள்ள பாமரர் யாவரும் தகுந்த விவசாய ஞானத்துடன் விளங்குவதற்கேற்றதாகக் காணப்படவில்லை. வங்காள விவசாய இலாகா ரிபோர்ட்டில் கூறியுள்ளவாறு ஒரு பையனை பால்ய முதற்கொண்டே தற்கால உயர் முறையை யறிந்துகொள்ளுமாறும் பழக்கிவிட்டால் அவனுடைய வயது காலத்தில் தென்படும் புதிய முறைகளைக் கிரகிக்கக்கூடிய வனாகி நன்மையடைய நேருமென்பதில் சந்தேகமில்லை."

பள்ளிக்கூடங்களும் பிரசுரங்களும் முக்கியமாயினும், கல்வி யபிவிருத்திக் கதியவசியமானதுத் தாய்பாஷையில் பேசுதலை [illegible]யேயாகும்.

இவ்விஷயமாகப் பிரஸ்தாப ரிபோர்ட்டில் ஒன்றும் காணப்படாதது வருத்தத்தருகிறது. வருஷாந்திரப் பிரசுரம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது கைவிடப்பட்டிருக்கிறது. ஆனால் பணமில்லாததனால் இவ்விதம் நேர்ந்திருக்கிறதென்று நாம் எண்ணுகிறோம். நம் நாட்டிற்குச் சமமான விசாலமான விவசாய தேசமாகிய அமெரிக்காவில் (யு. எஸ். ஏ.) பிரதிவருஷமும் அந்நாட்டவரின் தாய்பாஷையில் 2,000 பக்கங்களடங்கிய வருஷாந்திரப் பிரசுரம் 4,00,000 பிரதிகள் வழங்கப்படுகின்றன. அப்பிரசுரத்தில் காணப்படும் விவசாய சம்பந்தமான பலவித உபயோகமான தகவல்களையும், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சியின் பலன் விவரங்களையும், விவசாயம், வர்த்தகம் சம்பந்தமான உலக வியாபகமானப் புள்ளி விவரங்களையும், கவனித்தால் நம்முடைய வருஷாந்திரப் பிரசுரம் மலைமுன் மடுவைப் போல் இருக்குமிடமே தெரியாமலிருக்கிறது. மூன்று மாதங்களுக்கொருமுறை ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகளில் அதுவரை செய்யப்பட்டுள்ள பற்பல வேலைவிவரங்களும் சுருக்கமாக அச்சிட்டு வழங்கப்பட்டு வரும் வழக்கம் நீடித்து வருகிறது. இவ்விதம் ஒரு வேலை செய்யப்படுகிறதென்று அறிவித்திருக்கிறாரே தவிர விவசாய டைரக்டர் அதைப்பற்றிய விவரம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. இவ்வருஷத்தில் வழங்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்கள் மொத்தம் 44. சாதாரணமாக விதிகள், உத்தரவுகள் சம்பந்தமான அறிக்கைகளென்று கருதப்படும் தண்ணீர்த் தீர்வை அல்லது ஜாஸ்தி பைஸல், ரயத்துகளுக்குக் கடன் கொடுக்கும் விஷயங்களும் பிரசுரங்களெனச் சேர்த்துக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

கண்காட்சிகள் அநேகமாக அதிகமாகவே நடைபெற்றிருக்கின்றன. பிரஸ்தாப வருஷத்தில் நடைபெற்றுள்ள காட்சிகள் தொகை நூறாகும். டைரக்டரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ள இக்காட்சி சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. விவசாய இலாகாவைப்பற்றி ஒன்றுமே தெரியாத விடங்களில் இக்காட்சிகளை நடத்தி அந்த இலாகாவை விளம்பரப்படுத்துவது சரியா, தப்பா என்பதைப்பற்றி இருவகையான அபிப்பிராயமிருப்பதாக அவர் கூறுகிறார். நாம் அவ்விஷயத்தைப்பற்றி யொருவித மாறான அபிப்பிராயமும் கூறவேண்டியதில்லை. அவ்விதம் செய்வதில் பிரயோஜனம் யாதேனும் உண்டா என்ற சந்தேகம் டைரக்டர் மனதில் உதித்துவிட்டதென்ற காரணத்தைமாத்திரம்கொண்டு, உபயோகமாகவிருக்கும் ஒரு காரியம்செய்யாமல் நிறுத்தப்படமாட்டாதென்று நாம் நம்புகிறோம். மூன்று மோடார் லாரிகள் ஊர் ஊராகச்சென்று காட்சிகள் காட்டிவருவதற்கு வாங்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் மோடார் வண்டிகள் மூலம் நடத்தப்படும் காட்சியினால் ஏற்படும் பலாபலன்கள் என்னதான் என்பதை நாம் தற்சமயம் விஸ்தாரமாக ஆராயவிருப்பமில்லை. இருந்தாலும் இத்





தகைய ஏற்பாடுகள் ஏதோ யாமூலாக நடைபெறுவதாகக் காண்கிறதே தவிர வேறெவ்வித ஊக்கத்தையோ உற்சாகத்தையோ எழுப்பவில்லையென்பது மாத்திரம் நம்மனதில் தோன்றிக்கொண்டிருக்கிறது. இவ்விஷயமான பிரசாரம் நம் கவர்ன்மெண்டின் அபிவிருத்தி இலாகாவினால் செய்யப்படுவதில் உத்யோகப்பற்றற்றவர் சேர்க்கை இல்லாததே இதற்குக் காரணமென்று நாம் எண்ணுகிறோம். மிருக வைத்திய இலாகா யாதாஸ்தைப் பற்றிச் சென்றமாதம் நாம் எழுதியபொழுது குறிப்பிட்டதைப்போல் இந்த இலாகா சம்பந்தமானப் பிரசாரவேலையையும் உத்யோகப்பற்றற்றவர் அடங்கிய மத்யகமிட்டியிடம் ஒப்படைக்கவேண்டுமென்பது எமது திடமான அபிப்பிராயம்.

விவசாய இலாகாவினால் செய்யப்படும் வேலைகளை ஜனங்களுக்கு அவர் முன்னிலையில் அவர்களறிந்துகொள்ளுமாறு செய்து காட்டுவதே பிரசாரவேலையின் முக்கிய அம்சமாகவிருக்கிறது. (1) பருத்தி, சோளம், தென்னை, நெல், உருளைக்கிழங்கு, கேழ்வரகு, கரும்பு, இவற்றை விதை போட்டுப்பயிராக்கி, எருவிட்டுப்பயிர்செய்துக்கண்டு முதலாக்கும் முறைகள், (2) எருதுகளுக்காகாராதிகள், (3) பழங்கள், (4) ஆயுதங்கள், (5) மிருகஜாதிபோஷணை (6) எருதின் உறங்கள், எருத்தழை, பிண்ணாக்குகள், செயற்கை எருக்கள், என்பு எருவு, (7) செடிநோய்கள், பூச்சிகள், முதலிய பலவற்றிலும் இந்த இலாகா கவனம் செலுத்தியிருக்கிறது. விவசாயத் துணுக்குகள் என்னும் தலையங்கத்தின்கீழ் இவ்விஷயம் இப்பிரதியில்வேறிடத்தில் எடுத்துப்பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பலவகை விதைகள் விநியோகிக்கப்பட்டிருப்பதை இந்த இலாகா டைரக்டர் பெரிய வேலையாகக் கருதுகிறார். இதன் பலன்கள் யாவையென்பதைத் தெரியப்படுத்தப் புள்ளி விவரங்கள் கோர்வையாகக் கொடுத்திருந்தால் அவர் சொல்வதை யறிய உபகாரமாயிருந்திருக்கும். பல பக்கங்களைப் படித்தபிறகு தான் இத்தகவல்களை ஒருவாறுத் தெரிந்துகொள்ளமுடிகிறது. விதை விநியோக விஷயமாக அதிகம் விற்பனை செய்வதையே டிமான்ஸ்டிரேடர்கள் முக்கிய நோக்கமாகக்கொண்டு ஏராளமான விதையைச் சேகரித்து வைத்துக்கொள்வதில் முக்கிய சிரத்தை செலுத்தி இதர அவசியமான வேலைகளைக் கவனிக்காமலிருந்துவிடக்கூடாதென்று டைரக்டர் ஒரு எச்சரிக்கையும் செய்திருக்கிறார். இந்த எச்சரிக்கைப் பிரகாரம் விற்பனையில் மாத்திரம் சிரத்தை செலுத்தும் வழக்கத்தை முளையிலேயே தடுத்துவிடவேண்டும்.

வேலையைச் செய்து காட்டும் விஷயமாக இந்த இலாகா அனுஷ்டித்து வந்த கொள்கையில் இருவகை மாறுதலேற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஒன்று அல்லது இரண்டு தாலுக்காக்களில் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவுக் கிராமங்களிலும் டிமான்ஸ்டிரேடர் பிரசாரம் செய்ய

வேண்டுமென்பது பழைய வழக்கம்; அது மாறி, 4 அல்லது 5 கிராமங்களில் மாத்திரம் பூர்ண சிரத்தையும் செலுத்த வேண்டுமென்பது இப்போதைய ஏற்பாடு. விவசாய டிமான்ஸ்டிரேடர்கள் எந்தப் பிரசாரங்களில் முக்கியக் கவனம் செலுத்தவேண்டுமென்பதை முதல் முதலில் நிர்ணயித்துக்கொள்ள வேண்டுமென்பது இரண்டாவது விஷயம்.

பரிசுத்தமாகப் பயிரிடுதல், ஆட்டுமாட்டு எருவைப் பத்திரப்படுத்தி வைத்தல், கால்நடை சம்ரக்ஷணை, எருக்கலப்படம் செய்தல், நல்லவிதைகளைக் கெடாமல் காப்பாற்றிவைத்தல், பூமி வெடிப்புற்று புழுதியடையாமல் கவனித்தல் முதலிய முக்கிய விஷயங்களில் அவர்கள் கவனம்செலுத்த வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடுகளில் முதல் கூறப்பட்ட வேலைப்பயனுக விவசாய இலாகா அதிகாரிகள் விவசாயிகளுடன் அதிகமாக நெருங்கிப் பழக நேருகிறதாம். இது ஒருவழியில் உபயோகமான வேலையேயாயினும், இதனல் கிராமங்களிலிருக்கும் ரயத்துகளுக்குத் தக்க யோஜனை கூறும் கிரமமான வேலை பழுதாகாமல் கவனித்துக்கொள்ள வேண்டுமென்பதே நாம் கூறுவோம். இவ்விதமாகச் சில கிராமங்களில் மாத்திரம் பூர்ண கவனமும் செலுத்தும் வேலையில் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைப்பற்றி ரிபோர்ட்டிலிருந்து ஒன்றும் தெரியவில்லை. ஆகையினுல்தான் இத்தகையவேலையினுல் ரயத்துகள் சம்பந்தப்படும் பொதுவானவேலை எம்முட்டில் பாதிக்கப்படுகிறதென்பதை நாம் நிதானிக்க முடியவில்லை.

இவ்வளவு சுவாரஸ்யமான இந்த ரிபோர்ட்டில் காணப்படும் மற்ற இரண்டொரு விஷயங்களை மாத்திரம் கவனிப்போம்.

கிருமிகள், பூச்சிகள் விஷயங்களை ஆராயும் இலாகா கூறும் யோசனைப் பலன் தருமாறு வேலை செய்யவேண்டுமானல் ரயத்துகள் ஒன்றுபட்டு முன்வந்து அந்த யோசனைப்பிரகாரம் தாமதமேற்படாமல் முறைகளையனுஷ்டிக்கவேண்டிய அவசியமாகிறது என்று விவசாய டைரக்டர் கூறுகிருர். ரயத்துகள் உவந்து சேர்ந்து இவ்வித வேலைக்கு ஒத்துவாரததனல், யாரேனும் சிலர் தங்கள் பயிர்களைப் பூச்சிகளழிக்காமல் தடுக்கச்செய்யும் வேலைப்பலன் தராமற் போய்விடுகிறது என்பது ஓர் துர்ப்பாக்கியமே. பயிர் பச்சைகள் பூச்சிகளால் அழிக்கப்படுவது தெய்வப்பிராப்தமென்றும் அவை தீர்க்கமுடியாத சாபக்கேடென்றும் மூடநம்பிக்கையினுலும் அறியாமையினுலும் நம் ஜனங்கள் எண்ணுவதனுல்தான் இவ்வித துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறது. இந்த அறியாமை நீங்கும் வழியில் ஊக்கமும் உற்சாகமும் வாய்ந்தப் பிரசாரகர்கள் வேலைசெய்தால் நல்லபலனேற்படும். கவர்ன்மெண்டு இதற்கான முயற்சிகளைச் செய்யுமா? வருங்காலத்தில்





க்ஷேமத்தைத்தேட முக்கிய சாதனமாக ஒவ்வோர் கிராமத்திலும் பஞ்சாயத்துகளை அமைக்கத் துரிதமான வேலைசெய்ய அவர்கள் முன் வருவார்களா?

கூட்டுறவுச் சங்கங்கள் இந்த இலாகாவின் வேலைக்குபகாரமாகவிருக்க முற்போந்திருக்கின்றன. 5-வது வட்டத்திலிருக்கும் விவசாயக்கூட்டுறவுச் சங்கங்கள் பரீக்ஷார்த்த வேலை செய்துகாட்ட நிலங்களைப்பயிரிட்டும், படுகைகளையும் நாத்தங்கால்களையும் போஷித்தும், ரயத்துகளுக்கு விற்பதற்காக எருவையும், நெல்லையும் சேகரித்துவைத்தும் உதவிபுரிந்திருக்கிறது ஒரு விசேஷமாக குறிப்பிடத்தக்கதாகும். 8-வது வட்டத்திலிருக்கும் பல கூட்டுறவுச்சங்கங்கள் விவசாய இலாகாவின் மேற்பார்வையின்கீழ் பருத்தி விதை சேகரித்து பஞ்சைக் கொட்டையடித்துக் கொடுப்பதில் ஊக்கம் காட்டியிருக்கின்றன. பெல்லாரி, ஆதோனியிலுள்ள கடன், விற்பனைச் சங்கங்களும், பந்தன் ஹாலிலுள்ள விவசாய அபிவிருத்திச் சங்கமும் பருத்திவிதை வினியோகத்தில் முனைந்து பாடுபட்டிருக்கின்றன. விவசாயமாகச் செய்யக்கூடிய வேலைகள் பலவகையாக விருக்கின்றமையால் நாட்டிலுள்ள ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கமும் தங்கள் நோக்கத்திற்குட்பட்டு மேற்கூறப்பட்ட சங்கங்கள் செய்துவரும் வேலையைச் செய்ய யதேஷ்டமான சந்தர்ப்பங்களிருப்பதாக டைரக்டர் கூறியிருக்கிருர். நாம் இதைப் பூர்ணமாக ஒப்புக்கொள்ளுகிறேம்.

விவசாய இலாகாவின் வேலையைக்குறிக்கும் இந்த யாதாஸ்தில் இந்த இலாகாவிற்குட்பட்ட பலவட்டங்களின் வேலைவிவரங்கள் தனியாக விரிவுபடக் குறிப்பிடப்படாததைக் காண ஆச்சரியம் ஏற்படுகிறது. காட்டு இலாகாவில் இத்தகைய ரிபோட்டுதான் அதியவசியமெனக் கருதப்படுகிறது. விவசாய இலாகாவில் மாத்திரம் இதைக் கவனிக்காமலிருப்பதன் காரணம் நமக்கு விளங்கவில்லை. வங்காளத்தில் விவசாய இலாகாவின் வேலை விவர ரிபோர்ட்டில் எல்லாவட்டத்தின் வேலைவிவரமும் பூராவாகவும், விரிவாகவும் குறிப்பிடப்படுகிறது. நம்மாகாண மிருகவைத்திய இலாகா ரிபோர்ட்டிலும் ஜில்லா அதிகாரிகளின் ரிபோர்ட்டுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தக்குறையை அதிகாரிகள் கவனிக்கவேண்டுமென்று நாம் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

---

## பத்திராதிபரின் குறிப்புகள்.

**ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள்.**

பஞ்சாயத்து தேர்தல்கள் சம்பந்தப்பட்ட விதிகள் இப்பத்திரிகையின் டிசம்பர் பிரதியில் குறிப்பிடப்பட்டன. அவ்விதிகள் பிரசுரமான அறிக்கையில் பஞ்சாயத்துள்பட எல்லா ஸ்தாபனங்களுக்கும் நடைபெறவேண்டிய தேர்தல் விதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்க விரும்பும் புதிய கொள்கைகளை யனுசரித்துப் பரீக்ஷார்த்தமாக இவ்விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவை அனுகூலமாகத்தோன்றின் பொதுவாக எங்கும் அமுலுக்குக்கொண்டு வரப்படலாம். சென்ற மே மாதத்தில் வெளியான இந்தப் பிரசுரத்தில் H.S.G. என்றவர் எழுதிய வியாசத்தில் தேர்தலில் அபேக்ஷகராக நிற்பவர் புகைப்படம் வோட்டுக் காகிதங்களில் அச்சிடப்படவேண்டுமென்ற யோசனை கூறியதை வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். வாக்காளர்கள் பெயர் அச்சிடப்பட்ட காகிதத்தைக் கொடுத்தால் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் ஒன்றும் தெரியாமல் கஷ்டப்பட நேருகிறது. தவிரவும் பணவெண்மைபல்லது செல்வாக்கு மிகுந்த சில அபேக்ஷகர்கள் தங்களுடைய சக்தியைக்கொண்டு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களையும் நிரக்ஷரகுக்ஷிகளெனக் கூறிக்கொண்டு பகிரங்கமாக வோட்டு செய்யுமாறு உபத்திரவப்படுத்துகிறார்கள். இக்கஷ்டங்களை நிவர்த்தித்தாலல்லது இந்நாட்டில் தேர்தல் வெறும் போலியாட்டமாகவே முடியும். இதை யறிந்துக் கவர்ன்மெண்டுப் பொது ஜன அபிப்பிராயத்தைத் தழுவி அபேக்ஷகர்களுடைய பெயரை அச்சிடுவதுடனில்லாது அவர்களுடைய புகைப்பட உருவத்தையும் அச்சிட அனுமதித்திருப்பதைக் கவனிக்கச் சந்தோஷமேற்படுகிறது. இப்பொழுது வெளியாயிருக்கும் அதிகப்படியான விதிகளின் சாராம்சம் பின்வருமாறு: வோட்டுக் காகிதங்களில் குறி போடவேண்டிய அவசியமேயில்லை. ஒவ்வொரு அபேக்ஷகர் பேராலும் வோட்டுக் காகிதம் போடும் பெட்டித் தனியாக வைக்கப்பட்டிருக்கிறது. அப்பெட்டிகள் மீது அந்தந்த அபேக்ஷகர் புகைப்படமொன்று ஒட்டப்படும். வோட்டுக் காகிதம் வழக்கம்போல் தயாராயிருக்கும். அவற்றில் வோட்டெடுக்கும் அதிகாரி கையெழுத்திட்டபிறகு வோட்டரிடம் கொடுக்கப்படும். வோட்டுப்பதிவு செய்யுமறையில் புகுமுன்னர் அபேக்ஷகர்கள் உருவப்படம் கண் முன் தென்படுமாறு வைக்கப்பட்டிருக்கும். வோட்டறையில் சென்றதும் வோட்டர் தமக்கிஷ்டமான அபேக்ஷகர் படம் ஒட்டப்பட்டிருக்கும் பெட்டிக்குள் தம் கையிலிருக்கும் காகிதத்தைப் போட்டுவிடவேண்டும். அபேக்ஷகர்கள் தங்களுடைய உருவப்படத்தைக் காலாகாலத்தில் அனுப்பத் தவறினால் தேர்தலதிகாரி அவர்கள் ஒவ்வொருவருக்கும் தம்மிஷ்டப்படி ஒரு அடையாளம் அல்லது வர்ணம் கொடுத்துவைப்பார். வோட்டுக் காகிதம் போடப்படும் பெட்டிகள் வாக்காளர் தவிர வேறெவராலும் பார்க்கமுடியாமல் மறைத்து வைக்கப்படும். நமது மே மாதப் பிரதியில் எழுதிய H. S. G. அபேக்ஷகர்கள் உருவப்படத்தில் நெற்றியில் திலகம் அல்லது பொட்டு வைத்து வாக்காளர்கள் தங்களிஷ்டத்தைத் தெரிவிக்கலாமென்று எழுதியிருந்தார். ஆனால் கவர்ன்மெண்டு இப்பொழுது அனுஷ்டிக்கும் ஏற்பாடு அந்த யோசனையைவிட நல்லதென்பதில் சந்தேகமில்லை. இந்த ஏற்பாட்டினால் பெரிய தொல்லையொன்று நீங்கி





விட்டது. வோட்டுக் கணக்கெடுப்பதும் சுலபமாகி விடுகிறது. வோட்டுகளை அபேக்ஷகர் வாரியாகப் பிரிக்கவேண்டிய உபத்திரவமும் நீங்கிவிட்டது. வோட்டுப் பெட்டிகளை வேறிடங்களுக்குக் கொண்டுபோகும் விஷபமான கவலைகளும் அகல வழி பிறந்திருக்கிறது. அந்தந்த ஊரில் பதிவாகும் வோட்டுகளை அங்கேயே கணக்கெடுத்து அதன் விவரங்களை ரிடர்னிங் ஆபீஸருக்கு அனுப்பிவிடலாம். அந்த ஆபீஸர் இவ்விதமாகக் கிடைக்கும் கணக்குகளைக் கூட்டி முடிவை யறிவித்து விடலாம். வோட்டுகள் கணக்கெடுப்பதில் ஆக்ஷேபனைச் சந்தேகமிருந்தால் அதைக் குறித்து ரிடர்னிங் ஆபீஸரிடமோ அல்லது சிவில் கோர்ட்டிலோ அப்பீல் செய்துகொள்ளக்கூடும்.

கவர்ன்மெண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள அதிகப்படியான விதிகள் மிகவும் சுலபமாயிருப்பதுடன், தேர்தல் சம்பந்தமான பல ஒழுங்கீனங்களும் நேரா வண்ணம் தடுக்கக்கூடியனவாயிருக்கின்றனவென்பது எமது அபிப்பிராயம். இந்த விதிகளைச் சாசுவதமாக ஊர்ஜிதம் செய்து எல்லா ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களையும் அவ்வாறே நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இதில் தயங்கவேண்டிய காரணம் நமக்கு விளங்கவில்லை. இந்த ஏற்பாட்டை ஜனங்கள் அங்கீகரிக்க ஒரே ஒரு ஆக்ஷேபனையே கூறக்கூடும். அதாவது, வோட்டு கொடுப்பவர் யாதேனும் ஒரு சூழ்ச்சி செய்து தனியாகவிருக்கும் சமயத்தில் வோட்டுப்பெட்டிகளை மாறாட்டம் செய்யக்கூடுமென்று கூறலாம். இவ்வித விஷமம் நேர்வது மிகவும் துர்லபமெனலாம்; அவ்விதம் நேர்ந்தாலும்கூட, அம்மாறாட்டத்தை உடனேயோ அல்லது வோட்டு பூர்த்தியாகுமுன்னரோ கண்டுபிடித்து விடலாம். வோட்டுப் பெட்டிகள் தட்டுக்கெடாதவண்ணம் கவனிக்க ஒரு தனி யதிகாரியை நியமிக்கலாம்; அல்லது அவற்றை போலிஸ் அதிகாரிக் கண் பார்வைக்கெதிராக வைத்துக் கவனித்துக்கொள்ளலாம். விஷமம் செய்யும் வோட்டரை அந்த வோட்டர் கோஷ்டியையோக் கண்டுபிடிக்க ஒரு வழியைத் தேடுவதும் சிரமமாகாது.

இருந்தாலும் கவர்ன்மெண்டு அதி ஜாக்கிரதையாகவே யிருக்கிறார்கள். சில பஞ்சாயத்துகளையும் ஸ்தல ஸ்தாபன போர்டுகளையும் இந்த முறைப்பிரகாரம் தேர்தல் நடத்தச்சொல்லிப் பரீக்ஷை பார்க்க அவர்கள் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அந்த இடங்கள் தேர்தலதிகாரியினால் பிறகு விளம்பரப்படுத்தப்படும்.

இந்தப் புதிய ஏற்பாட்டை நாம் மனப்பூர்த்தியாக ஆதரிக்கிறோம். தேர்தல் ஒழுங்காக நடைபெறவேண்டுமென விரும்பும் ஒவ்வொரு வாக்காளரும் அபேக்ஷகரும் இந்த முறைத் திருப்திகரமாக நடைபெற உதவி புரியவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம். தேர்தல் கால ஒழுங்கீனங்களை ஒழிக்க ஸ்தல ஸ்தாபன போர்டு இன்ஸ்பெக்டர் கண்டுபிடித்திருக்கும் இந்த நல்ல யோசனைக்கு அவரை நாம் பாராட்டுகிறோம். இவ்வேலை நடப்பதில் கொஞ்சம் சிரமமிருக்குமென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். தேர்தலான பிறகு அதிகாரம் செலுத்துவோர்களுக்குட்பட்டவர்கள் கையிலில்லாமல் தேர்தல் இனி ஸ்தல ஸ்தாபன போர்டு இன்ஸ்பெக்டர் அதிகாரத்திற்குட்பட்டவரா யிருக்கிறபடியால், கவர்ன்மெண்டு இந்தப் புதிய யோசனைப் பிரகாரம் திருப்திகரமாக வேலை நடைபெற வழிதேட முற்படுவாரென்று நம்புகிறோம்.

---

## கிராமாந்திர அபிவிருத்தி நிதி.

(செய்யாறு தாலுக்கா போர்டு தலைவர் ஸ்ரீமான் டி. எம். ஆதிகேசவலு நாயுடு எழுதுவது.)

ஜில்லா போர்டு ஒவ்வொன்றும் "கிராம அபிவிருத்தி நிதி" என்றோர் நிதி சேர்த்து வைக்கவேண்டுமென்று ஸ்தல ஸ்தாபன போர்டுச் சட்டம் 114-A விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்நிதி பின் வரும் வழியில் செலவிடப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

(1) கிராம ரஸ்தாக்கள் அபிவிருத்தி.

(2) ஜல சப்ளை வசதி.

(3) தேச ஆரோக்கிய சுகாதார ஏற்பாடுகள்.

இந்த நிதி ஜில்லா போர்டுத் தலைவர், அந்த ஜில்லா போர்டிலுள்ள தாலுக்கா போர்டுத் தலைவர்கள் முதலியோரடங்கிய கமிட்டியால் நிர்வகிக்கப்படவேண்டியது. இந்தக் கமிட்டி உடனே ஏற்பட்டு, கிராமாந்திர அபிவிருத்தி நிதியை உபயோகமாகச் சமமாக அதிக சீக்கிரத்தில் செலவிடப்படுவதற்கான திட்டம் தயாரிக்க வேண்டும். இது விஷயமாக எனக்குச் சில யோசனைகள் தோன்றுகின்றன. மேற் சொல்லப்பட்ட கமிட்டி இவற்றைப் பரிசீலனை செய்துத் தக்க ஏற்பாடுகள் செய்யுமென்று நம்புகிறேன்.

ரோடு மராமத்து வேலையும், ஜல சப்ளை விஷயமும், அங்குமிங்கும் துணுக்குத் துணுக்காகக் கவனிக்கப்படுவதை விட்டு, ஜில்லா முழுவதும் ஒருமிக்க உபயோகிக்கப்படக்கூடிய வழியில் ஒரு திட்டம் தயாரித்து அதைப் பூர்த்தி செய்யவேண்டும். இதைச் செய்யவேண்டுமானால் தற்சமயமுள்ள ஸ்திதி யாதென்பதைக் கவனித்துக் கணக்கெடுத்து இதில் என்ன சீர்பாடவசியமென்பதையும் நிதானிக்கவேண்டும். கிராம வாசிகளுக்கு இப்பொழுது அத்தியாவசியமாகவேண்டியது வைத்திய வசதிகளும் சுகாதார சௌகரியங்களுமேயாகும். நாட்டுப்புறங்களில் இத்தகைய வசதிகள் கிடைப்பது மிகவும் துர்லபமாயிருக்கிறது. சுகாதார வசதியென்றால் என்னவென்பதே கிராம வாசிகளுக்குத் தெரியாது. குளம், ஏரி, ஆற்றங்கரைகள்தான் கிராம வாசிகளால் கக்கூஸாக உபயோகிக்கப்படுகிறது. பிடிச்சுவர் மதில்களில்லாத குளம் கிணறுகளும் அசுத்தங்கள் கூட்டப்படாத தெருக்களும் வண்டி செல்ல சரியான ரோடுகளில்லாததும் கிராமங்களைச் சுற்றிச் சப்பாத்திக்காடுகள் மண்டியிருப்பதுவும் கிராமாந்திரங்களில் சகஜமான காட்சிகளாயிருக்கின்றன. பொது ஜனங்களின் பணத்தைக் கிராமவாசிகளுடைய சேர்க்கையும் சம்மதமுமில்லாமல் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் மூலம் செலவிடுவதனால் மேற்கூறப்படும் குறைகள் நிவர்த்தியாவதில்லை. கிராம அபிவிருத்திநிதியைச் சிருஷ்டிக்கச் சட்டசபை இப்பணம் ஜனங்களறிய யாவரும் ஒத்துச் செலவிடவேண்டுமென்றும் பழைய அனுஷ்டானத்தைப் புதிப்பிக்கும் நோக்கத்துடன் கிராமப் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் விதித்திருக்கிறது.



## கிராமாந்திர அபிவிருத்தி நிதி.

1. கிராம அபிவிருத்தி திட்டங்களில் கிராமாந்திர அபிவிருத்தி நிதியிலிருந்துப் பணம் செலவிடுவதில் கிராமப் பஞ்சாயத்துகளின் யோசனையையும் கேட்டறிந்துகொள்ளவேண்டிய அவசியமாகும். இந்த யோசனைப் பிரகாரம் நடக்க வேண்டுமானால் கிராமப் பஞ்சாயத்துகளை முதலாக ஏற்படுத்தவேண்டும்.

2. பெரிய கிராமத்தை எடுத்துக்கொண்டு அதைச் சுற்றிலுமுள்ளக் கிராமங்களை அத்துடன் சேர்த்து ஒரு கமிட்டியை ஏற்படுத்தவேண்டும்.

3. கிராமங்களில் காணப்படும் ஊழல்களை நிவர்த்திப்பதற்கவசியமான செலவிற்குத் தேவையான பணத்திற்கு அந்தந்தக் கிராமங்களில் சாத்தியமான வேலையாட்கள் தானியம், பணம் முதலியவற்றைச் சேகரித்துக்கொள்ளவேண்டும்.

4. கிராமாந்திர அபிவிருத்தி நிதிப் பணத்தையும், கவர்ன்மெண்டினால் ரோடு ஜல சப்ளைக்காகக் கொடுக்கப்படும் பணத்தையும் செலவிடுவதற்கு ஒரு திட்டமொன்று முன்னதாகவே தயாரித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

கிராமாந்திர அபிவிருத்தி நிதிக்கமிட்டிப் பணம் கிடைத்ததும் மேற்கூறப்பட்ட வழிகளில் அதைச்செலவிடத் தாமதிக்காமல் முற்படவேண்டும். ஒவ்வொரு தாலுக்காவிலும் பஞ்சாயத்துக்களேற்படுத்தி அவற்றின் வேலையை மேற்பார்வையிட இரண்டொரு சூபர்வைஸர்களை நியமித்துக்கொள்ளலாம். இவர்கள், கிராம அபிவிருத்தி வேலையைக்கவனிக்க நியமிக்கப்படும் ஜில்லா பஞ்சாயத் ததிகாரிக்குட்பட்டு வேலை செய்யவேண்டும். இந்த வேலைகளைச் சரிவரத் திருப்திகரமாகச் செய்து முடிக்கும் திறமையுள்ளவர்களை இப்பதவிகளுக்கு நியமிக்கப்படவேண்டும்.

பஞ்சாயத்து உத்யோகஸ்தர்கள், சுத்த ஜலசப்ளை வசதி, கிராமங்களில் ரோடுகள் போடுதல், பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது. வாசக சாலைகள், புஸ்தகசாலைகள் நடத்துவது, வைத்தியசாலைகள் சுகாதார சௌகரியங்கள் செய்து போன்ற பல திட்டங்களைத் தயாரிக்கவேண்டும்; ஒவ்வொரு தாலுக்காவிற்கும் கொடுக்கப்படும் ஓவர்ஸீயர்கள் இத்திட்டங்களை மூன்று வருஷகாலங்களில் அமுலுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளையும் செலவு விஷயங்களையும் கணக்கிட்டுப் பட்டியல் தயாரிக்கவேண்டும். இதைக்கொண்டு தாலுக்கா போர்டுகளின் ஒத்துழைப்பின் பேரில் கிராமாந்திர அபிவிருத்தி நிதிக்காரியாலயம் பணத்தைச் செலவிட்டு வேலையை நடத்த ஏற்பாடுகள் செய்யவேண்டும், தாலுக்காபோர்டுகள் பஞ்சாயத்து உத்யோகஸ்தரின் உதவியைக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருப் பஞ்சாயத்தை ஏற்படுத்திப் பின்வரும் வேலையைச் சரிவர நடத்துவதற்கனுகூலமாகக் கமிட்டிகளேற்படுத்த அந்தக் கிராமங்களைச் சேர்த்தமைக்கவேண்டும், இக்கமிட்டிகள் (1) மத்திய பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது (2) வாசகசாலை புஸ்தகசாலைகள் ஏற்படுத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயச் சபைகள் அமைத்து இவற்றை மேற்பார்வையிடவேண்டும்.

1. கவர்ன்மெண்டு கிராண்டையும் கிராம அபிவிருத்தி நிதியையும் செலவிடுவதில் அனுஷ்டிக்கவேண்டிய கொள்கை பின்வருமாறிருக்கவேண்டும். பஞ்சாயத்தேற்படுத்த உபகாரமாக முன்வராத எந்த கிராமத்திற்கும் இந்த நிதியிலிருந்து ஏற்படும் சௌகரியங்கள் அளிக்கப்படக்கூடாது.

2. ரூ. 1000-க்குள்பட்டச் செலவினங்கள் யாவும் மிஷிலேனியஸ் ஏஜென்ஸ் மூலமும், ஆயிரத்திற்கதிகமாகச் செலவாகும் வேலைகள் இஞ்சினியரிங் இலாகா மூலமும் நடத்தப்படவேண்டும். ஏதேனும் ஒரு வேலை ஒரு கிராமத்திற்கே மாத்திரம் உபயோகமாயிருப்பின், அந்த இனத்திற்காகும் செலவில் கால்பாகம் அந்தந்தக் கிராமப் பஞ்சாயத்திடமிருந்து வசூலிக்கப்படவேண்டும். இந்தச் செலவு வீதம் கூலி வேலையாள்களாகவோ வேறெவ்வகையிலுமோ ஏற்கப்படலாம். ஒரு கிராமத்திற்கதிகமாகப் பலக்கிராமங்களுக்குப் பொதுவாக உபயோகப்படும் வேலையின் செலவு கிராம அபிவிருத்தி நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

3. தாலுக்கா போர்டுப் பஞ்சாயத்துகளால் ஏற்கனவே போடப்பட்டுள்ள ரோடுகள் எம்மட்டில் ஜில்லா போர்டு ஆதீனத்தில் கொண்டுவரலாமென்பதை ஜில்லா போர்டுகள் கவனித்தறியவேண்டும். வருகிற வருஷங்களில் கிராம அபிவிருத்தி நிதியிலிருந்துச் செலவிட்டுப் போடப்படும் புதிய ரஸ்தாக்களின் பராமரிப்பிற்குத் தேவையாகும் செலவையும் எதிர்பார்த்து ஜில்லா போர்டின் வரவு செலவு திட்டம் கணக்கிடப்படவேண்டும். பருகுவதற் கவசியமான ஜல சப்ளைக்காதாரமான மூலஸ்தானங்கள் சீர்பட்ட பிறகு, அவற்றைச் சுத்தமாகவைத்துக்கொண்டு பராமரிக்கும் பொறுப்புப் பஞ்சாயத்துகளிடம் விடப்படவேண்டும்.

கிராமங்களில் மனிதவாழ்க்கைக் கவசியமானச் சுகாதார வசதிகள் செய்துச் சுத்தமாகவும் அழகாகவும் வாசஸ்தலங்களிருப்பதைக் கவனித்து நோயணுகாமல் தடுக்கத்தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்புக் கிராம அபிவிருத்தி நிதிக் கமிட்டியைச்சேர்ந்தது. இக் கமிட்டிப் பஞ்சாய்த்து வேலைக்காரர்கள் மூலம் இந்தப் பொறுப்பை நிர்வகிக்கவேண்டும். ஜனங்களுடைய சௌகரியங்களுக்காகக் கவர்ன்மெண்டினால் அனுஷ்டிக்கப்படும் முறைகளையும் கிராமவாசிகளுக்குபயோகமாக உதவி புரியவேண்டியதும் அக் கமிட்டியின் கடமையாகும். தவிர பிரசவ கால வசதிகள், சிசுசம்ரக்ஷணை ஸ்தாபனங்கள், விவசாய அனுகூலம் முதலியவற்றிற் கவசியமானச் சங்கங்களையும் இக் கமிட்டிகளே ஏற்படுத்த முன் நிற்கவேண்டும்.

# தோல் வியாபாரிகளின் தொல்லை.

மேற்குக் கோதாவரி ஜில்லா, பீமாவரம் தாலுக்காவில் கிராமப் புனருத்தாரண வேலை சூபர்வைஸர் ஸ்ரீமான் கே. நரசிம்ம ராஜு, B.A., எழுதுவது :—

எந்த கிராமத்திலும் அன்றாடம் காலக்ஷேபம் நடத்திவரும் ஏழைகள் வசிக்கும் தீண்டத்தகாத இடமே ஆபாசமாகக் காண்கிறது. இவர்களுடைய தினசரி வருமானம் மிகவும் அற்பமாயிருக்கிறபடியால் தான் அங்கு வசிப்பவர்கள் தங்கள் வாசஸ்தலத்தைச் சுத்தமாகத் தோன்றுமாறுச் செய்யப் பணம் செலவிட வகையற்றிருக்கின்றனர். இவர்கள் குடிசைகளோ சிறிதளவு மனையில் ஒன்றுமேலொன்றாக இடித்து நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கின்றன; அங்கு வசிப்பவர் ஜனத்தொகை எவ்வளவு அதிகரித்தபோதிலும் ஜாகை விஸ்தரிப்பதில்லை. அந்த மனைக்குள் எவ்வளவு பேர் வசிக்கலாமோ அந்த அளவும் மீறி ஜனத்தொகை யதிகப்படுவதினால் தான் சுகாதாரம் குறைந்துபோய் ஆபாஸங்களதிகரிக்கின்றன.

இந்தக் கேவலமான காட்சி மாத்திரமல்லாது, தீண்டப்படாத ஸ்தலங்களுக் கருகில் மறித்துப்போன மிருகங்களின் தோல்களடைத்து வைக்கும் சகிக்கமுடியாத காட்சியையும் காண நேருகிறது. தோலை விற்றும் பிழைப்பவர்கள் தங்களுக்கு லாபம் தரக்கூடிய தோலையுரித்து யெடுத்துக்கொண்டு பிணத்தின் மாமிசத்தை அப்புறப்படுத்தாமல் அங்கேயே போட்டுவிட்டுச் செல்லுகின்றனர். எலும்புகளை விற்றால் லாபம் கிடைக்குமென்று எதிர்பார்த்தச் சக்கிலியர்கள் தக்க கிராக்கி ஏற்படும்வரையில் அவற்றைக் குவித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். அது வரையில் அழுகிச் கிடக்கும் அந்த இறைச்சிகளை நாய்களும் வல்லூறுகளும் இழுத்துச் சின்னபின்னப்படுத்துகின்றன.

அந்த இடத்தில் ஏற்படும் துர்நாற்றம் அக்கம்பக்கம் பூராவும் வீசுகிறது. அதனால் கணக்கற்ற தொத்துநோய் கிருமிகளும் பரவுகின்றன. வருஷா வருஷம் இந்த எலும்புக்கு வியல் மீது விழுந்தோடும் மழை ஜலமோ அதிர்ஷடஹீனரான தீண்டாதாருக்காக ஏற்பட்டுள்ள இடிந்த கிணறுகளுக்கும் எடுத்துக் கட்டப்படாத குளங்களிலும் போய்ச்சேர்ந்து அந்த தண்ணீர்த்தேக்கங்களைச் சாக்கடைகளுக்குச் சமமாக்கி விடுகிறது. வேலை யதிகத்தால் சோர்வடைந்தும் ஆகாரக் குறைவினால் தளர்வுற்றுமிருக்கும் மனிதப்பிறவியாகத் தோன்றியிருக்கும் அந்த ஜீவன்கள் அந்த ஜலத்தைப் பருகுவதனால் கோடிக் கணக்கான பிணி யுண்டுபண்ணும் கிருமிகளுக்கிரையாகின்றனர். மனிதன் மூடச்செய்கையினால்தான இந்த வினை ஏற்படுகிறது.

ஜனங்கள் சுகித்து வாழவேண்டுமானால் சுகாதாரமாக வாழவேண்டுமென்ற பொறுப்பும் உணர்ச்சியும் யாவருக்கும் நுட்பமாகவிருக்கவேண்டிய தவசியமாகும். ஒரு ஊரில் ஒருவர் அசுத்தமாகவும் நோயுடனுமிருப்பாரேயாகில் அவருடன் வாழ நேரும் எவருக்கும் பூரண சுகமென்பது இருக்காது. நம் நாட்டில் உயர் ஜாதியினர் தாங்கள் வசிக்குமிடம் சுற்றிலும் சுத்தமாகவிருப்பதை முக்கியமாக கவனித்துக்

கொள்ளுகிறார்கள்; ஆனால் ஒருவர் அபசாரம் செய்தாலும் கோடிக்கணக்கான ஜனங்கள் அந்தப் பாவ வினைக்காளாகவேண்டியிருக்கிறது. இதைச் சுகாதார அதிகாரிகளுணர்ந்து, மேற்கூறப்பட்டுள்ள அசுத்த நிலைமை மாறவேண்டிய வேலை செய்யவேண்டியதவசியமாகிறது. ஆதித்திராவிடர்களும், தோல் வியாபாரிகள் தங்களுடைய சொந்த லாபத்தைக் கருதி, தங்களுடைய வாசஸ்தலத்தை அசுத்தப்படுத்தி வருகிறார்களென்பதை யுணர்ந்து விழித்தெழவேண்டியதவசியம். பஞ்சாயத்துகளும் தோல் வியாபாரிகள் கிராமத்திலுள்ள எந்த இடத்தையும் தங்களிஷ்டப்படி உபயோகிப்பதைத் தடுத்து, கிராமத்திற்கு வெளியே வெகு தூரத்திலோரிடத்தை அவர்களுக்காகவென்று ஒதுக்கவேண்டியதவசியம்.

---

## வரகூர் (வட ஆற்காடு) பஞ்சாயத்து உபாத்தியாயர்கள் மகாநாடு.

வேரியூர் தண்டாரம்பேட்டை பிர்க்காக்களிலுள்ள பஞ்சாயத்து உபாத்தியாயர்கள் மகாநாடு ஒன்று செங்கம் தாலுக்காவைச் சேர்ந்த வரகூர் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடத்தில் 1931-ம் வருஷம் டிஸம்பர் மீ 13உ பிற்பகல் 1-மணிக்குக் கூடிற்று. வானபுரம் மெடிகல் ஆபீஸர் ஸ்ரீமான் வி. சாம்பமூர்த்தி, L.M.P., அவ்வமயம் அக்கிராசனம் வகித்தார். கௌரவப் பஞ்சாயத்து ஸ்தாபகர் ம-ா-ா-ஸ்ரீ டி. எம். வெங்கடகிருஷ்ண ரெட்டியார் அவர்கள் சுருக்கமாக ஒரு பிரசங்கம் செய்து மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

பஞ்சாயத்து உபாத்தியாயர்கள் யாவரும் மகாநாட்டு விவாதங்களில் கலந்து கொண்டனர். முடிவில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. உபாத்தியாயர்களுக் களிக்கப்படும் சன்மானத்தை ரூ 15-லிருந்து ரூ. 12-க்கு ஒரேயடியாகக் குறைப்பதைக் கேட்டுப் பஞ்சாயத்து உபாத்தியாயர்களுடைய இம்மகாநாடு மிகவும் பயமுறுகிறது.

2. இவ்விதம் சம்பளத்தைக் குறைப்பதானது அதிகச் சம்பளம் வாங்கும் உயர் அதிகாரிகளுக்குக் குறைப்பதைவிட இரட்டிப்பதிகமாயிருக்கிறதென்று இம்மகாநாடு எண்ணுகிறது. இந்தக் குறைவை யனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது பொருத்த அநீதமென்று சிக்கனக் கமிட்டிக்குத் தெரியப்படுத்துகிறது. மேலும் மாதச் சம்பளம் ரூ. 40-க்குக் குறைந்த சம்பளம் வாங்குபவர் வருமானத்தைக் குறைக்கக்கூடாதென்று சிக்கனக் கமிட்டி உத்தேசித்திருப்பதையும் அதிகாரிகள் கவனிக்கவேண்டுமென்று இம்மகாநாடு வணக்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

3. அவசரச்செலவு நிமித்தம் பஞ்சாயத்துபாத்தியாயர்கள் பிரதிமாதமும் செலவிட நேரும் ரூபாய் ஒன்று பஞ்சாயத்துகளால் கொடுக்கப்படுவதில்லை. இச்செலவு போக உபாத்தியாயர்கள் பெற்றுபோகும் சம்பளம் அசலே ரூ. 11 தானாகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.





4. உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் கிராண்டுத்தொகையில் குறைவேற்பட்டால் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களின் திறமை குன்றிவிடுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

5. ஒரே பிர்க்காவில் உபாத்தியாயர்கள் கிராண்டு பலவாராகவிருப்பதை ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டர் கவனிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது (சென்ற மே மாதம் அனுமதிக்கப்பட்ட உபாத்தியாயர் கிராண்டுத்தொகை ரூ 15. அதே பிர்க்காவில் ஆகஸ்டுமாதம் அனுமதிக்கப்பட்ட கிராண்டு மாதம் ரூ. 12). குறைந்த கிராண்டு அனுமதிக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துகளிலும் உபாத்தியாயர்களுக்கு இதர பஞ்சாயத்தைப்போல் மாதம் ரூ. 15 அனுமதிக்க ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டர் முயற்சிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

6. உயர்தர ஆரம்பக்கல்வி கற்றிருக்கும் உபாத்தியாயர்களுக்குக் குறைந்தது ஜீவனத்திற்குப் போதிய அளவேனும் சம்பளம் கொடுக்க வழிதேடவேண்டுமென்று கனம் ஸ்தலஸ்தாபன மந்திரியையும், கல்வி மந்திரியையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. 40 மாணாக்கர்களுக் கதிகமாயுள்ள பள்ளிக்கூடங்களில் அதிகப்படியாக நியமிக்கப்படவேண்டிய உபாத்தியாயர்களுக்கு சம்பளம் கொடுக்கப் போதிய பணம் பஞ்சாயத்துகளிடமிருப்பதில்லையாகையால் அத்தேவைக்கவசியமான தொகையை மாகாண வருமானத்திலிருந்து அனுமதிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

8. மேற்சொன்ன தீர்மானங்களை ஒவ்வொருவருக்கும் தெரிவிக்கவேண்டுமே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மகாநாட்டுத்தலைவருக்கு இச்சபை யனுமதியளிக்கிறது.

---

## விவசாயத் துணுக்குகள்

1930-31-ம் வருஷத்திய சென்னை ராஜதானியில் விவசாயிகளுக்கு விதைகள் பின் வருமளவு வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. கம்போடியாப் பருத்தி 2,75,000 பவுண்டுகள்; கருங்கண்ணிப் பருத்தி விதை 20,000 பவுண்டுகள்; i) மேற்குறித்த விதை 3,00,000 பவுண்டுகள்; வடக்குத்தி 91,900 பவுண்டுகள்; நெல் விதை 1 65,604 பவுண்டுகள்.

* * *

சென்ற 3 வருஷங்களாகக் கருங்கண்ணி சரியாகப் பயிராகாததினால் இந்த விதைச் சுலபமாக விற்பனையாகவில்லை. உப்பம் அதை விட நன்றாகவிருக்கிறது.

* *



160212

வடக்குத்திப் பருத்திப் பெரும்பாலும் கர்நூல் ஜில்லாவில் முக்கியமாக 3 தாலுக்காக்களிலுள்ள 13 கிராமங்களிலிருக்கும் விதைப்பண்ணையால் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. விதைப் பண்ணைப் பருத்தியிலிருந்து வரும் பஞ்சு விற்பனையினால் மூட்டை ஒன்றுக்கு ரூ. 35 லிருந்து ரூ. 47 வரையில் லாப மேற்பட்டிருக்கிறது.

* * *

நந்தியாலில் பயிரான பருத்தி 14-ம் நம்பரை விட உயர்வாகக் காணப்பட்டது ஆனால் ஒன்றாவது நிறத்தில் அதற்குச் சமமாகவில்லை.

* * *

ஆவனாசியில் ரயத்துகள் நிலத்தில் முன்னதாகப் பயிரிடப்பட்ட பருத்தி விளைவு அதிசயமாகவிருந்தது. பின்னால் பயிரிடப்பட்ட நிலங்களில் 1090 பவுண்டு விளைந்திருக்கையில் முன்னதாகப் பயிரான பூமியில் 1488 பவுண்டு கண்டு முதலாயிருக்கிறது.

* * *

இம்மாகாணத்தில் புதியதாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் நெல் தானியங்களில் ஜி. இ. பி. 24-ம் நம்பர் விதை பல ரகம் கலந்ததாகக் காணப்படுகிறது. இது பயிராகக் கொஞ்ச காலம் தான் தேவை நிறமும் நன்றாகவிருக்கிறது; விளைவும் அதிகமாயிருக்கிறது. பல்லாரி ஜில்லாவிலுள்ள இருகுப்பாவில் 100-க்கு 60-வீதம் நிலத்தில் இந்த வகை நெல் பயிரிடப்பட்டிருக்கிறது.

* * *

நெல் பயிரிடப்படும் நிலங்களில் இரண்டாம் போகம் நெல்லுக்குப் பதிலாக அதிக லாபம் தரக்கூடிய பயிர் போடவேண்டுமென்று யோசனை செய்து பரீட்சைகள் நடைபெற்றன. கரும்பு, வாழை, வேர்க்கடலை ஆகிய மூன்று பயிரும் போடுவதாக ஏற்பாடுகள் நடைபெற்றன. மொரட்டூரில் தால்வா நிலத்தில் எள்ளு, வெங்காயம், ஆமணக்கு, கேழ்வரகு முதலியனவும, உயர் பூமியில் பருத்தி, சோளம, மஞ்சள் முதலியனவும் பயிர் செய்யப்பட்டன. புஞ்சை நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்படும் பட்டாம்பி யென்னுமிடத்தில் சேமாய், வேர்க்கடலை, பருத்தி, துவரையும் மோதான் நெல்லும் கலந்து பயிரிடப்பட்டு வருகின்றன. இவை யாவும் லாபகரமாகவிருப்பதாக நிதர்சனமானால்தான் ரயத்துகள் இவ்வழக்கத்தை யனுஷ்டிக்க முற்படுவார்கள்.

* * *

விவசாய இலாகாவினால் பொறுக்கி வைக்கப்பட்டிருக்கும் கேழ்வரகு நெ. 525 ஏக்ராவிற்கு 2,500 பவுண்டு விளைகிறது

* * *

கேழ்வரகு வருஷம் பூராவும் பயிரிடப்படலாமென்று நம்பப்படுகிறது.

* * *

சோளம் 27 அங்குலத்திற்கு ஒரு மூளையாக வைத்தால் 14 அங்குலத்திற்கு ஒரு மூளை வைப்பதைவிட அதிக தானியம் விளைகிறது.

* * *





சொப்பத்தட்டைப் பயிர் மிகவும் உபயோகமாயிருந்தும் லாபகரமான பயிராயில்லையென்று விவசாய இலாகா டைரக்டர் கூறுகிறார்.

* * *

வேர்க்கடலைக்கொடி படருவதை 6" × 6" அங்குல விஸ்தீரணத்திலும் கொத்தாக விளைவதை 6" × 4" அங்குல இடையிலும் பயிரிட்டால் அதிகம் விளைகிறது. கொடிப் பயிர் முத்துவதற்கு 135-நாள்களும், கொத்துப் பயிர் முத்துவதற்கு 105 நாள்களுமாகின்றன. குடிபாத்தம் கொத்து மிகவும் நன்றாகவிருக்கிறது.

* * *

எரு விஷயமாகப் பின் வரும் குறைகள் சகஜமாயிருக்கின்றன. (1) எருவைக் குவித்து வைப்பது, (2) சிறுநீர் வீணாக்கப்படுகிறது, (3) எருக்குழி வெயிலிலுலரவும், மழையில் நனையவும் விடப்படுகிறது. இக்குறைகளை நீக்கிச் சரியான எருத் தயாராகவேண்டுமானால் பின் வருமாறு செய்யவேண்டும். (1) எருவைக் குழி வெட்டிப்போட்டு வைக்கவேண்டும். (2) வைக்கோல் கூளம் குப்பைகளைக்கொண்டு அவற்றை மூடி வைக்கவேண்டும். (3) கால்நடைகளைக் கட்டுமிடங்களில் வைக்கோல் கூளங்களைப் போட்டுவைத்து அங்கு விழும் மூத்திரநீரை இழுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

* * *

கரும்பு, வாழைச்செத்தை, கிராமங்களில் விழும் குப்பைகள், சப்பாத்தி முதலியவற்றை வீணாக்கக்கூடாது. இவற்றைச்சேர்த்துக் குழியில் போட்டு மக்கவிடவேண்டும். 1930-31-ம் வருஷத்தில் விவசாய இலாகா அதிகாரிகள் கண்ணெதிரில் 700 எருக்குப்பைக்குழிகள் தயாராகியது. இவற்றினால் விவசாயிகள் மெத்த லாபமடைந்தனர். குப்பைக்குழிகளில் மக்கிப்போகும் எருவையும், கால்நடை எருவையும் பரீட்சித்து ஒத்துப்பார்த்ததில் இரண்டும் சமகுணம் வாய்ந்திருப்பது வெளியாயிற்று.

* * *

தயினச்சா, சூரியகாந்தி, காட்டவுரி, அவுரி, பில்லி பெஸாரா முதலிய பச்சைப் பயிர்கள் நல்லஎருக்களாக உபயோகப்படுகின்றன. பில்லிபெஸ்ஸாரா கொஞ்சகாலமாகத்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ரயத்துகள் சேர்ந்து பிரயத்தனப்பட்டால்தான் இந்த எருச்செடிகள் பயிரிடப்படலாம். குடியானவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தேவைக்கவசியமான எருப்பயிர்களைத் தயாரித்துக்கொள்ளவேண்டும். 5-வது வட்டக்கூட்டுறவு சங்கங்களின் மூலம் 14,000 ஏக்ரா நிலங்கள் பயிராவதற்கு போதிய எருவிதைகள் விநியோகிக்கப்பட்டிருப்பதைக் கேட்கத் திருப்திகரமாயிருக்கிறது.

* * *

செயற்கை எருக்களில் என்புத்தூளும் புண்ணாக்குமாகக் கலந்துசெய்யப்படும் எருவே மிகவும் மலிவாயிருக்கிறது. பிரதிப்பிரயோஜனத்தை உடனே அடையவேண்டுமென்ற அவசர ஆசையினால் ரயத்துகள் ஸூபர் பாஸ்பேட்டை உபயோ

கிக்க முற்படுகிறார்கள். என்புத்தூளையும் பிண்ணாக்கையும் சேர்த்துப் போடப்படும் எருவே மிகவும் நல்லது.

* * *

அம்மோனியம் ஸல்பேட்டும் பொட்டேஷ்யம் ஸல்பேட்டும் உபயோகிக்கப்பட்டால் களிமண் பூமியின் புளிப்புத்தன்மை மாறிவிடுகிறது.

* * *

5-வது வட்டத்தில் நெற்பயிருக்குக் கால்நடை எருவு உயயோகப்பட்டுவருகிறது. இங்கு இந்த எரு அதிகம் உபயோகப்படுகிறபடியால் அளவைக்குறைத்துக் கொள்ளவேண்டுமென்றும், இந்த எருவின்பலன் நீடித்திருக்கவேண்டுமானால் அம்மோனியம் ஸல்பேட்டும் கலந்துபயோகிக்கவேண்டுமென்றும் விவசாய இலாகா சிபார்சு செய்கிறது.

* * *

கரும்புப்பயிருக்குப் பச்சைப்பூண்டு எருவைமாத்திரம் தனியாக உபயோகிப்பதைவிட செயற்கை எருவையும் சேர்த்து உபயோகிப்பது நலமாகும். சாதாரணமாகப் பண்ணைகளில் உபயோகிக்கப்படும் எருவளவில் மூன்றிலொருபாகம் எடுத்துக்கொண்டு 2·5 அந்தர் அம்மோனியம் ஸல்பேட்டையும் சேர்த்து உபயோகித்ததில் பண்ணை எரு மாத்திரம் உபயோகிக்கப்பட்டதைவிட 100-க்கு 13 விகிதம் பயிரதிகமாக விளைகிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

* * *

1930-31-ம் வருஷத்தில் உழவுசெய்வதைப்பற்றி 2,000 பரீக்ஷைகள் செய்து காட்டப்பட்டிருக்கின்றன.

* * *

ஜலப்பஞ்ச மேற்பட்டிருக்கும் வருஷங்களில் ஆழமாக உழுதால் விளைவு குறைந்துபோகிறது.

* * *

காலாகாலத்தில் உழுவதுடனில்லாது பயன்பட உழுவதும் ரயத்துகளின் லக்ஷியமாகவிருக்கவேண்டும். 1930-31-ம் வருஷத்தில் விவசாய இலாகா இருவிதமான கலப்பைகள் புதுமாதிரி உபயோகித்துவந்திருக்கிறார்கள். இவற்றில் பெரியது விலை ரூ. 12; சிறியது ரூ. 5. நாட்டில் ஏற்கனவே பலவிதக் கலப்பைகள் இருக்கின்றன. ஆகையினால்தான் ரயத்துகள் இவற்றை வாங்கத் தயங்குகிறார்கள். விலைகளைக் குறைத்து ரயத்துகளுக்குதவிபுரிய இக்கலப்பைகளை முன்போல் ஏராளமாக வாங்கிவைத்துக் கொள்ளவேண்டுமென்று விவசாய இலாகா டைரக்டர் கூறுகிறார்.

* * * *





பெல்லாரி ஜில்லாவிலிருக்கும் ஹோஸூர்பட்டியில் வளர்க்கப்படும் ஆடுகளின் கம்பளி ரோமம் ஆட்டுக்குச் சராசரி 2 பவுண்டு 12 அவுன்ஸ் வீதம் கிடைத்தது. சென்ற வருஷம் 2 பவுண்டு 5 அவுன்ஸ்தான் கிடைத்தது. மிகவும் நிறையக் கிடைத்த ரோமம் 6 பவுண்டு 15 அவுன்ஸாகும்.

* * *

புகையிலைக் கஷாயம் கிருமி சம்ஹாரத்திற்குக் கைகண்ட ஔஷதமாகும்.

* * *

சாத்துக்கொடி ஆரஞ்சுகளை மூடிக் கட்டிவைத்தால் ஒருமாதம் முன்னதாகப் பழம் முத்திப்போகிறது. இவ்விதம் கட்டிவைக்கப்படும் பழங்களில் தித்திப்பும் மூடப்படாத பழத்தைக்காட்டிலும் 100-க்கு ஒரு மடங்கு அதிகமாயிருக்கிறது.

* * *

முன்னதாகப் பயிரிடப்பட்ட கரும்புகள் நீர்ப்பாசனக்குறைவினால் சீக்கிரம் முத்திவிடவில்லை. அருவடைகாலத்திற்கு ஒருமாதம் முன்னதாகக் கரும்புப்பயிருக்குத் தண்ணீர் ஏராளமாகக்கட்டினால் கரும்பங்கழி சீக்கிரம் முத்திப்போகிறது.

* * *

கம்போடியாப்பருத்தி ஒருபயிருக்கும் மற்றொன்றுக்கும் இடைக்காலம் ஜாஸ்தியாயிருந்தால் விளைவு அதிகரிக்கிறது. இதனால் பருத்தியின் திறமும் உயர்வாகக் காணப்படுகிறது.

* * *

2-வது வட்டத்தில் நாட்டு ஆரஞ்சு கிராக்கி மிகவும் அதிகமாயிருந்ததனால் இது அதிகம் பயிராகி தற்சமயம் தேவைக்கதிகமாகப் பழம் குவிந்திருக்கிறது.

* * *

1930-31-ம் வருஷத்தில் எண்ணெய் வித்து நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தேங்காய், கடலைக்கொட்டை, ஆமணக்கு, எள் முதலியவற்றை இவர் ஆராய்ந்துவருகிறார்.

* * *

கோயமுத்தூர் விவசாய கலாசாலையிலிருக்கும் 177-ம் நெம்பர் பசு வேறுஜாதி காளைக்கு விடப்பட்டதனால் 414 நாள்களில் 11,890 பவுண்டு பால் கறந்திருக்கிறது. இதைத் தினசரி சராசரி கணக்கெடுத்தால் நாள் ஒன்றுக்குக் கறவை 28·7 பவுண்டு ஆகிறது.

* * * *

இவ்வருஷம் 6-வது வட்டத்தில் 10,000 ஏக்ராப் பருத்திதான் விதை பரவப்பட்டது. சென்ற வருஷம் 18,000 ஏக்ராப்ப வப்பட்டது. விதை பரவும் ட்ரில்

## கிராமப் பஞ்சாயத்து

ஆயுதங்கள் வாங்க முதலில்லாததும், விவசாயிகளுக்குப் புதிய முறையை நாட வேண்டுமென்றும் ஊக்கமில்லாததுமே இவ்வழியில் அபிவிருத்தி யேற்படாததற்குக் காரணமாயிருக்கிறதென்று டைரக்டர் அபிப்பிராயப்படுகிறார்.

*　　　　*　　　　*　　　　*

பருத்திக்கொட்டை யெடுத்துக் கட்டிவைக்கும் தொழிற்சாலைகளில் சிலவிடங்களில் பவுண்டு எடை 38·88 தோலாவிற்குப் பதிலாக 40 தோலாவாகக் கணக்கு வருகிறதென்றும் இக்குறையை நிவர்த்திக்க முயற்சி நடப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

*　　　　*　　　　*　　　　*

விவசாய ஆராய்ச்சி மூன்றுவிதமாக நடைபெறுகிறது. முதலாவது கோயமுத்தூரில் மத்திய ஆராய்ச்சி, இரண்டாவது ஸ்தலப் பண்ணைகளில் அவை அனுபவத்தில் கொண்டுவரச்செய்யப்படும் முயற்சி, மூன்றாவது பரீக்ஷை நடத்துவது. அனுபவப்பரீக்ஷை ஸ்தலத்திற்கேற்ப அமைந்தபிறகு வயலில் பரீக்ஷை செய்யப்பட்ட பிறகே ரயத்துகளுக்கு அம்முறை போதிக்கப்படுகிறது இதிலிருந்து ஆராய்ச்சிப் பண்ணைகளில் விஷயத்தைப் பிரத்யக்ஷமாக கையாண்டு காட்டப்படுகிறதே ஒழிய என்ன பலன் ஏற்படுகிறதென்று பரீக்ஷை பார்ப்பதில்லை,

160292
சென்னை-600 00…

## நாமே உயிர்த்தோழர்கள்

20 நாளைக்கு ஒரு ரூபாய் பெற்று தினம் இரண்டு வேளை உம்முடைய வியாதிகளை அப்புறப்படுத்தி உம்முடைய வாழ் நாளை நன்னாட்களாய் கழியும்படி செய்ய

**மதனசஞ்சரி டானிக்**

என்னும் பெயருடன் உலாவும் தமையனும் வந்த வியாதிகளைத்தீர்க்கவும் வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கவும் வேண்டிய வழிகாட்டி

**வைத்திய வித்தியா**

என்னும் பெயருடன் இலவசமாய் கிடைக்கும் தம்பியுமேயாம். எழுதுங்கள்

---

மதனமஞ்சரி பார்மஸி
1/94, சீனா பஜார், மதராஸ்.

## அசோக சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

### (அசோக உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக-உப்பு ஓர் அருமருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும், மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அஜீரணம், பித்த வாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலை மயக்கம் முதலிய நோய்களை நீக்கவல்லது பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீரண பேதி, கணச் சூடு, வெட்டைச் சூடு, மூலம், கரப்பன், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல் போன்ற ரோகங்களைப் போக்கி, எவ்வித பிணியும் அணுகாமல் காக்கக்கூடியது அசோக-உப்பே யாகும்.


விலை ரூ. 1-8-0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட், சென்னை.

# மையர்ஸ் பம்புகள் ஜெகப்பிரசித்தி பெற்றவை

**எல்லா வேலைகளுக்கும் இவைகளையே உபயோகியுங்கள்**

கைபம்புகள், விசிரி (ஸ்பிரே) பம்புகள்,
பவர் பம்புகள் முதலியவை எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்




## ஸ்டோவர் எஞ்ஜின்கள்.

*பவர் பம்புகளும் மற்ற மெஷின் பம்புகளையும் ஓட்டுவதற்கும், தங்களுக்கு எக்காரியத்திற்காகப் பம்புகள் வேண்டுமென் பதைப்பற்றியும் விவரமாக எழுதுங்கள். எஸ்டிமேட்டின் :: விவரம் முழுவதும் அனுப்புகிறோம். ::*

**இந்தியாவுக்கு சோல் ஏஜண்டுகள் !—**

தபாற் பெட்டி
நெ. 202 } ***லிமாயி பிரதர்ஸ் லிமிடெட்,***
**1/173, பிராட்வே, மதராஸ்.**



பத்திராதிபர்.—*கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.*

அச்சிடுவோர்.—*மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,*
*சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.*